ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018.05.11

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 பெப்புருவரி

**பொதுநோக்கு**

சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி, பங்குப் பரிவர்த்தனைக்கான தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க விரிவு காணப்படுகின்றமை 2018 பெப்புருவரியில் ஏற்றுமதித் துறைச் செயலாற்றத்தின் முக்கிய பண்பாகக் காணப்பட்டது. ஏறத்தாழ 3½ ஆண்டு கால ஒட்டுமொத்த வணிக இறக்குமதிகளில் மிக விரைந்த அதிகரிப்பிற்கு பின்னால் முக்கிய தூண்டுதலாக தங்க இறக்குமதிகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்புக் காணப்பட்டதுடன் இது, 2018 பெப்புருவரியில் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் விரிவடைய வழிவகுத்தது. 2018 சனவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சியாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018 பெப்புருவரியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. எனினும், சனவரியில் காணப்பட்ட வளர்ச்சியினைத் தொடர்ந்து, 2018 பெப்புருவரியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தன. சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்து 2018 பெப்புருவரியில் அரச பிணையங்கள் சந்தையில் ஏற்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சலை சமநிலைப்படுத்துவதற்கு உதவியிருக்கிறது. 2018 ஏப்பிறலில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டு வெற்றிகரமான வழங்கல்களின் மூலம் சென்மதி நிலுவை மேலும் வலுவடைந்ததுடன் இது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை 2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனுக்கு பெருமளவிற்கு அதிகரித்திருப்பதுடன் இவ்வதிகரிப்பு இதுவரை பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த மட்டமாகவும் காணப்படுகிறது. அதேவேளை, இலங்கை ரூபா 2018 மே 11 நாள் வரையான இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 3.2 சதவீதத்தினால் தேய்வடைந்திருக்கிறது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [(அ)]

| வகை | பெப்புருவரி 2017 ஐ.அ.டொ. மில் | பெப்புருவரி 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - பெப் 2017 ஐ.அ.டொ. மில் | சன - பெப் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 868 | 916 | 5.5 | 1,733 | 1,881 | 8.6 |
| இறக்குமதிகள் | 1,611 | 1,978 | 22.8 | 3,410 | 3,992 | 17.1 |
| வர்த்தக மீதி (தேறிய) | -743 | -1,062 | | -1,678 | -2,111 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 366 (ஆ) | 437 (இ) | 19.3 | 773 (ஆ) | 880 (இ) | 13.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 598 (ஈ) (உ) | 572 | -4.4 | 1,268 (ஈ) (உ) | 1,301 | 2.6 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 60 | 18 | | 49 | 54 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 227 | 286 | | 444 | 571 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 130 | 95 | | 213 | 265 | |
| நீண்ட காலக் கடன்கள் | 97 | 191 | | 231 | 306 | |
| திரண்ட நிலுவை | | | | -258.3 | -0.4 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதுடன் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.

(உ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட திருத்திப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஊ) இரண்டாந்தரம் மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### வர்த்தக நிலுவை

வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 பெப்புருவரியில் தொடர்ந்தும் விரிவடைந்தது. தங்க இறக்குமதியினால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக இறக்குமதியின் மீதான செலவினம் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட தாக்கம் யாதெனில், வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்து மூன்றாவது மாதமாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியமையேயாகும்.

**வரைபடம் 1: மாதாந்த வர்த்த நிலுவை**




மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 பெப்புருவரியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மீதான வருவாய்கள் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து, ஏற்றுமதி வருவாய்கள் சுருக்கமடைந்து காணப்பட்ட 2017 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் குறைந்த தளத் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. பெயரளவு நியதிகளில், 2018 பெப்புருவரியில் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 916 மில்லியனாக விளங்கியது. இது தொடர்ந்து ஏழு மாதங்களாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அண்மைய உத்வேகத்தின் முக்கியமானதொரு தன்மையாகும். எனினும், குறிப்பாக கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட தூண்டுதலுடன் அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளும் ஓரளவு விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களில் ஏற்பட்ட தூண்டுதலினால் பெற்றோலிய உற்பத்திகள் கணிசமாக அதிகரித்தன. அதிகரித்த கேள்வியின் காரணமாக நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருளின் ஏற்றுமதி அளவுகள் 46.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சராசரி விலைகள் 16.0 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 3.8 சதவீதத்தினால் குறைவடைந்த போதும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 10.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இந்தியா, யப்பான், ஹொங்கொங் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்தான வருவாய்கள் 1.5 சதவீதத்தினால் உயர்வடைந்தன. எனினும், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு மின்னியல் பொறிகள் மற்றும் கருவிகளின் குறைந்த ஏற்றுமதிகள் காரணமாக விளங்கிய வேளையில் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி என்பன வீழ்ச்சியடைந்தமைக்கு காலணிகளின் குறைந்த ஏற்றுமதிகள் காரணமாக விளங்கியது. வேளாண்மை ஏற்றுமதிகளைப் பொறுத்த வரையில் 2018 பெப்புருவரியில் தேயிலை ஏற்றுமதிகள் மீதான வருவாய்கள் அதிகரித்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்த போதும் உயர்ந்த விலைகள் காரணமாக அமைந்தன. எனினும், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தெங்கு ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. உயர்ந்த தெங்குத் தும்பு ஏற்றுமதிகளின் பெறுபேறாக உள்ளீடு அல்லாத உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்த போதும் இவ்வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இம்மாத காலப்பகுதியில் இறப்பர் மற்றும் வாசனைத்திரவியங்கள் மீதான ஏற்றுமதி வருவாய்களும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2018 பெப்புருவரியின் ஏற்றுமதி வளர்ச்சிக்குப் பங்களித்திருக்கின்றன. 2018 பெப்புருவரியில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 51 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)

| வகை | பெப். 2017 ஐ.அ.டொ. மில் | பெப். 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - பெப் 2017 ஐ.அ.டொ. மில் | சன - பெப் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **659.4** | **703.2** | **6.6** | **1,327.4** | **1,460.9** | **10.1** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 23.7 | 29.6 | 25.3 | 45.7 | 77.8 | 70.2 |
| விலங்குத்தீன் | 6.7 | 7.8 | 17.2 | 13.5 | 14.9 | 10.0 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 396.1 | 407.0 | 2.8 | 822.4 | 841.8 | 2.4 |
| இதில் ஆடைகள் | 371.0 | 381.5 | 2.8 | 776.2 | 790.8 | 1.9 |
| புடவைகள் | 19.0 | 18.1 | (4.8) | 33.8 | 36.6 | 8.6 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 6.0 | 7.4 | 22.5 | 12.5 | 14.4 | 15.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 64.8 | 68.3 | 5.4 | 122.8 | 139.4 | 13.5 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 22.6 | 23.1 | 2.1 | 44.4 | 50.6 | 14.1 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 37.6 | 31.4 | (16.5) | 63.6 | 61.1 | (3.8) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.8 | 7.9 | 0.9 | 15.1 | 15.2 | 1.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 27.2 | 45.5 | 67.2 | 56.7 | 98.2 | 73.2 |
| இரசாயன உற்பத்திகள் | 10.3 | 12.6 | 22.1 | 21.3 | 25.1 | 18.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.7 | 12.2 | 13.8 | 21.9 | 23.5 | 7.1 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 2.6 | 1.1 | (56.3) | 7.3 | 2.7 | (63.5) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 16.3 | 14.8 | (9.5) | 25.7 | 27.8 | 8.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.1 | 6.8 | 34.9 | 9.7 | 13.1 | 34.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 7.7 | 11.2 | 45.5 | 15.8 | 23.3 | 47.1 |
| இரசாயன உற்பத்திகள் | 2.8 | 2.2 | (22.9) | 4.9 | 4.1 | (15.8) |
| ஏனையவை | 17.4 | 21.8 | 24.9 | 36.6 | 42.3 | 15.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **204.9** | **206.1** | **0.6** | **398.5** | **410.2** | **2.9** |
| தேயிலை | 113.9 | 118.2 | 3.8 | 215.5 | 230.0 | 6.7 |
| இறப்பர் | 5.6 | 4.1 | (27.0) | 10.6 | 8.1 | (23.3) |
| தேங்காய் | 27.2 | 26.3 | (3.1) | 54.5 | 47.5 | (12.8) |
| வாசனைத்திரவியம் | 25.3 | 24.6 | (2.7) | 55.7 | 54.7 | (1.9) |
| மரக்கறிகள் | 1.8 | 1.6 | (12.1) | 3.6 | 3.5 | (4.3) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.7 | 3.6 | (3.0) | 5.8 | 5.4 | (6.8) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 8.6 | 8.2 | (4.8) | 15.9 | 18.7 | 17.8 |
| கடலுணவு | 18.8 | 19.5 | 3.9 | 37.0 | 42.4 | 14.7 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.6** | **6.3** | **76.9** | **6.6** | **9.9** | **50.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **867.8** | **915.7** | **5.5** | **1,732.5** | **1,881.0** | **8.6** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

2018 பெப்புருவரியில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2014 ஒத்தோபரிற்குப் பின்னர் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மிக உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பெயரளவு நியதிகளில் 2018 பெப்புருவரியில் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,978 மில்லியனாக விளங்கியது.

வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட இக்கணிசமான அதிகரிப்பிற்கு 2017 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த தளம் பகுதியளவில் காரணமாக அமைந்தது. முக்கியப் பங்களிப்பாளராகக் காணப்படும் இடைநிலைப்பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தின் அதிகரிப்பிற்கு அனைத்து முக்கிய வகைகளும் பங்களித்திருக்கின்றன. இடைநிலைப்பொருட்களின் கீழ் 2018 பெப்புருவரியில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்து மாதாந்த தங்க இறக்குமதிகளில் முன்னொருபோதுமில்லாத மிக உயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. தங்க இறக்குமதிகள் தொடர்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தீர்வை வேறுபாடுகளின் காரணமான சட்டத்திற்கு முரணான வணிக நடவடிக்கைகளின் சாத்தியத்தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு 2018 ஏப்பிறல் 18ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தங்க இறக்குமதிகளின் மீது 15 சதவீதம் கொண்ட சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது. ஆகவே, தங்க இறக்குமதிகள் இனிவரும் மாதங்களில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புடவை மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் உயர்வடைந்தமைக்கு துணிகள் மற்றும் நூலிழைகளின் அதிகரித்த இறக்குமதியே காரணமாகும். எனினும், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு இனிவரும் மாதங்களில் புடவைகள் மற்றும் ஆடைகளின் உயர்ந்த ஏற்றுமதிகளுக்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2018 பெப்புருவரியில் கோதுமை மற்றும் சோளத்தின் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு உயர்ந்த அளவுகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையின் விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். எனினும், பேணல் நோக்கங்களுக்காக தூய்மி மூடப்பட்டமையின் காரணமாக மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படாமை மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் குறைந்தளவு என்பன 2018 பெப்புருவரியில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைய வழிவகுத்த போதும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது. நுகர்வுப்பொருட்கள் வகையில் 2018 பெப்புருவரியில் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2017இன் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு சிறிய பெற்றோல் ஊர்திகளினதும் கலப்பு ஊர்திகளினதும் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். எனினும், அரிசி இறக்குமதிகளின் தூண்டுதலினால் தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் மீது ஏற்பட்ட அதிகரித்த இறக்குமதிச் செலவினம் உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் இருப்பு அதிகரித்தளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையின் காரணமாக 2017 சனவரியின் பின்னர் முதற்றடவையாக வீழ்ச்சியடைந்தது. 2018 பெப்புருவரி காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்களின் கீழான அனைத்துத் துணைத் துறைகளும் அதிகரித்தன. 2018 பெப்புருவரியில் சீனா, இந்தியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு

எமிரேட்ஸ் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

### அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | பெப். 2017 ஐ.அ.டொ. மில் | பெப். 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - பெப் 2017 ஐ.அ.டொ. மில் | சன - பெப் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **343.2** | **441.8** | **28.7** | **702.0** | **883.3** | **25.8** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 148.1 | 165.3 | 11.6 | 291.7 | 349.0 | 19.6 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 37.1 | 25.1 | (32.3) | 49.8 | 58.3 | 17.1 |
| இதில் அரிசி | 35.9 | 23.5 | (34.4) | 47.6 | 54.8 | 15.2 |
| பால் உற்பத்திகள் | 26.5 | 26.9 | 1.4 | 47.6 | 58.8 | 23.6 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 17.4 | 31.0 | 78.8 | 39.4 | 58.7 | 49.0 |
| கடலுணவு | 14.1 | 20.6 | 45.9 | 32.3 | 41.3 | 27.6 |
| மரக்கறிகள் | 28.1 | 30.7 | 9.0 | 66.8 | 70.5 | 5.6 |
| பழங்கள் | 6.9 | 8.6 | 25.0 | 12.6 | 16.0 | 26.9 |
| குடிபானங்கள் | 5.3 | 5.5 | 4.7 | 11.3 | 10.3 | (8.5) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 12.8 | 16.9 | 31.9 | 32.1 | 35.2 | 9.7 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 195.1 | 276.5 | 41.7 | 410.3 | 534.3 | 30.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 41.8 | 38.5 | (7.9) | 80.7 | 82.6 | 2.4 |
| ஊர்திகள் | 51.3 | 113.7 | 121.5 | 117.3 | 208.8 | 77.9 |
| வீட்டுச்சாதன மற்றும் தளபாடப் பொருட்கள் | 11.0 | 17.3 | 56.6 | 24.8 | 33.1 | 33.5 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 26.1 | 32.3 | 24.1 | 56.1 | 69.8 | 24.4 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 22.5 | 28.4 | 26.4 | 41.1 | 47.3 | 15.1 |
| அழகுசாதனங்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் | 6.9 | 6.4 | (6.8) | 14.3 | 13.2 | (7.9) |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 2.5 | 2.4 | (3.9) | 5.0 | 5.3 | 4.7 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 33.1 | 37.6 | 13.7 | 70.9 | 74.3 | 4.8 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **907.4** | **1,096.3** | **20.8** | **1,858.0** | **2,229.7** | **20.0** |
| எரிபொருள் | 354.6 | 315.2 | (11.1) | 637.4 | 677.2 | 6.3 |
| இதில் மசகெண்ணெய் | 84.2 | - | (100.0) | 126.1 | 103.4 | (18.0) |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 213.8 | 268.9 | 25.8 | 418.5 | 492.8 | 17.7 |
| நிலக்கரி | 56.6 | 46.3 | (18.3) | 92.7 | 81.0 | (12.7) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 54.4 | 120.0 | 120.5 | 123.4 | 224.8 | 82.1 |
| இதில் தங்கம் | 46.6 | 111.9 | 140.1 | 110.8 | 205.7 | 85.7 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 186.6 | 247.3 | 32.5 | 439.6 | 492.5 | 12.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 13.1 | 43.7 | 234.1 | 43.8 | 74.8 | 70.8 |
| கனிம உற்பத்திகள் | 8.5 | 22.3 | 162.3 | 23.6 | 36.0 | 52.5 |
| கனிம உற்பத்திகள் | 62.1 | 75.0 | 20.9 | 131.8 | 149.5 | 13.4 |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 18.8 | 19.3 | 3.0 | 43.9 | 45.8 | 4.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.1 | 6.9 | 69.8 | 7.4 | 9.1 | 22.2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வளமாக்கி | 9.0 | 20.3 | 126.7 | 13.1 | 62.7 | 377.8 |
| அடிப்படை உலோகங்கள் | 52.5 | 47.9 | (8.8) | 90.9 | 107.5 | 18.3 |
| ஏனையவை | 143.8 | 178.3 | 24.0 | 303.1 | 349.9 | 15.4 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **360.3** | **380.5** | **5.6** | **792.5** | **817.4** | **3.1** |
| பொறி மற்றும் கருவிகள் | 111.9 | 123.0 | 10.0 | 247.8 | 266.1 | 7.4 |
| கட்டடப் பொருட்கள் | 50.2 | 56.2 | 11.9 | 94.5 | 108.9 | 15.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 197.8 | 200.4 | 1.3 | 448.4 | 440.7 | (1.7) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.4 | 0.9 | 147.5 | 1.8 | 1.6 | (10.5) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.2** | **59.3** | **26,153.5** | **57.5** | **62.2** | **8.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,611.2** | **1,978.0** | **22.8** | **3,410.1** | **3,992.5** | **17.1** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

2018 பெப்புருவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 19.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2017 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் சீனா, இந்தியா, ருசியா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பனவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் உயர்ந்த எண்ணிக்கையே தூண்டுதலாக அமைந்தது. இவ்வாண்டின் முதல் இரண்டு மாதங்களில் 474,542 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததன் மூலம் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 13.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. 2018 பெப்புருவரியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 437 மில்லியன் என மதிப்பிடப்பட்டதன் மூலம் 2018இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 880 மில்லியனாக விளங்கின. அதேவேளை, கடந்த பல ஆண்டுகளாகக் காணப்படும் வழமையான மாதிரியொன்றாக 2018 பெப்புருவரியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் மிதமடைந்து காணப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் முதல் இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதத்தினால் அதிகரித்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2018 பெப்புருவரி காலப்பகுதியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் உட்பட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 18 மில்லியனாகக் காணப்பட்டது. இதன்படி, 2018இன் முதல் இரண்டு மாதங்களில் ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 54 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, 2018 சனவரியில் ஐ.அ.டொலர் 47.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைத் தொடர்ந்து 2018 பெப்புருவரியில் அரசாங்கப் பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) சந்தை ஐ.அ.டொலர் 55.6 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. பெப்புருவரியின் முதல் வார காலப்பகுதியில் ஏற்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் சந்தையிலிருந்தான நாளாந்த வெளிப்பாய்ச்சலின் கணிசமான பங்கு மாதத்தின் பின்னரைப்பகுதியில் படிப்படியாகத் தணிக்கப்பட்டது. மேலும், 2018 பெப்புருவரி காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் ஐ.அ.டொலர் 108 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனுக்கு அதிகரித்து 4.4 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. ஒதுக்கின் மாதாந்த அதிகரிப்பிற்கு மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்கள் ஒன்றுதிரண்டமையே முக்கிய காரணமாகும். வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் உள்ளிட்ட மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் 2018 சனவரி இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 10.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பெப்புருவரி இறுதியில் ஐ.அ.டொலர் 10.1 பில்லியனுக்கு அதிகரித்தது. 2018 பெப்புருவரி இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 5.6 மாத இறக்குமதிகளை உள்ளடக்குவதற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் போதுமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 மே 11 நாள் வரை ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 3.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா அவுஸ்திரேலியா டொலர் மற்றும் இந்திய ரூபா என்பன தவிர்ந்த அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகத் தேய்வடைந்தது. ரூபா பலயீனமடைந்தமை ஐ.அ.டொலர் உலகளாவிய ரீதியில் பரந்த அடிப்படையில் வலுவடைந்து வருவதனை ஓரளவிற்குப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கு ரூபாவின் செலாவணி அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 பெப்புருவரி 20 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -3.2% |
| யூரோ | -13.5% | -3.0% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -3.7% |
| யப்பானி யென் | -5.1% | -6.0% |
| கனேடியன் டொலர் | -8.6% | -1.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | +0.2% |
| இந்தியன் ரூபா | -7.5% | +1.6% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி